# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.69/2020**
Prosecution: **PW15**

Deposition of the witness of **LW17**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.திருநாவுக்கரசு | District | வேலூர் |
| Father Name | திரு.சித்தன் | Occupation | காவல் ஆய்வாளர்,<br>திருவலம் காவல் நிலையம் |
| Village /Area | திருவலம் | Age | 55 |
| Taluk | வேலூர் | Emp No. | 181500 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **20.01.2026.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது வேலூர் மாவட்டம் திருவலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.09.2019-ம் தேதி இராணிப்பேட்டையில் வட்டக் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது இராணிப்பேட்டை காவல் நிலையக் குற்ற எண்.576/2019, பிரிவு 174(3) கு.வி.மு.ச வழக்கினை அப்போதைய இராணிப்பேட்டை உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் திருமதி.கீதா என்பவர் விசாரணை மேற்கொண்டு இறந்த நபரான தனலட்சுமி, க.பெ.செல்வம், பைரவா காலனி, நரசிங்கபுரம் என்பவரை அவரது கணவர் கொலை செய்துள்ளார் என்றும், அது தொடர்பாக இவ்வழக்கை கொலை வழக்காக மாற்றம் செய்து விசாரணை தொடருமாறு எனக்கு போடப்பட்ட உத்தரவு அ.சா.ஆ.13-ன் அடிப்படையில் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். பின்னர் இவ்வழக்கின் எதிரியான செல்வம் என்பவரை இராணிப்பேட்டை சார் ஆட்சியரின் விசாரணைக்காக 21.09.2019-ம் தேதி உட்படுத்தப்பட்டவர் அவர் முன்னிலையில் தான் தான் தன் மனைவியை கொலை செய்துவிட்டு அவரது மனைவியின் சேலையில் தூக்குமாட்டிவிட்டதாக ஒப்புக்கொண்டுள்ளார். பின்னர் இவ்வழக்கின் சட்டப்பிரிவான 174(3) கு.வி.மு.ச-விலிருந்து சட்டப்பிரிவை 323, 302 மற்றும் 201 இ.த.ச பிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த

சட்டப்பிரிவு மாற்ற அறிக்கை **அ.சா.ஆ.15** ஆகும். எதிரி செல்வத்தை 21.09.2019—ம் தேதி 22.45 மணிக்கு இராணிப்பேட்டை சார் ஆட்சியர் அலுவலகத்திடம் வைத்து கைது செய்து பின்னர் கைது செய்த விவரத்தை அவரது உறவினராக நாகராஜன் என்பவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அங்கிருந்து இரவு நேரம் என்பதால் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று அவருக்கு போதுமான உணவு மற்றும் ஒய்வளிக்கப்பட்டு 22.09.2019—ம் தேதி காலை 6.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான பைரவா காலனி, நரசிங்கபுரத்திலுள்ள எதிரியின் வீட்டிடம் அழைத்து சென்று அவரை எவ்வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளும் மிரட்டலுமின்றி அங்கு வரவழைக்கப்பட்ட சாட்சிகள் ரமேஷ்குமார், வடிவேல் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. எதிரி செல்வம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்டப் பகுதி ஏற்கனவே அ.சா.7 மூலம் அ.சா.ஆ.4—ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் இவ்வழக்கில் சம்பவ இடத்தில் பயன்படுத்தப்பட்ட எதிரியால் அடையாளம் காட்டப்பட்ட பித்தளை அண்டா ஒன்று, தரையில் பதிக்கப்பட்டு பெயர்த்தெடுக்கப்பட்ட முழு செங்கல் ஒன்று, அங்கிருந்த பீரோவிலிருந்து கழட்டி எடுக்கப்பட்ட ஸ்டீல் கைப்பிடி ஒன்று இவைகளை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ5—ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மகசரில் கைப்பற்றப்பட்ட பித்தளை அண்டா ஒன்று, தரையில் பதிக்கப்பட்டு பெயர்த்தெடுக்கப்பட்ட முழு செங்கல் ஒன்று, அங்கிருந்த பீரோவிலிருந்து கழட்டி எடுக்கப்பட்ட ஸ்டீல் கைப்பிடி ஒன்று ஏற்கனவே அ.சா.7 மூலம் சா.பொ.2 முதல் சா.பொ.4—ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் இவ்வழக்கின் எதிரியை உரிய வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டது. மேலும் மகசரில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை படிவம்—91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டது. அந்தப் படிவம் 91 **அ.சா.ஆ.16** ஆகும். சாட்சிகள் கண்ணன், மார்கபந்து, வள்ளியம்மாள், முருகன், குமரேசன், ரமேஷ்குமார் மற்றும் வடிவேல் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இவ்வழக்கில் இறந்த தனலட்சுமியின் உடலை பிரேத பரிசோதனை செய்த வாலாஜா அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஜனார்தனன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றேன். அதன் பிறகு இறந்த தனலட்சுமியின் நாவடி எலும்பை பரிசோதனை செய்த வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவர் திரு.நாகேந்திரகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்த நபரின் உடல் உள்ளுறுப்புகளை ரசாயண பரிசோதனை செய்த உதவி இயக்குநர் திரு.அசோக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தேன். வழக்கின் பிரேத பரிசோதனைக்கு நியமிக்கப்பட்ட பெண் காவலர் திருமதி.பிரேமா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் சட்டப்பிரிவை 323, 302 மற்றும் 201 இ.த.ச பிரிவிலிருந்து மாற்றம் செய்து சட்டப்பிரிவு 302 மற்றும் 201 இ.த.ச பிரிவாக மாற்றம் செய்தேன். அதற்கான சட்டப்பிரிவு மாற்று அறிக்கை **அ.சா.ஆ.17** ஆகும். பின்னர் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 302 மற்றும் 201-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

இராணிப்பேட்டை சார் ஆட்சியர் அவருடைய விசாரணையை முடித்து அவரது அறிக்கையை எனக்கு 21.09.2019-ம் தேதி அனுப்பினார். அதை நான் எத்தனை மணிக்கு பெற்றுக்கொண்டேன் என்பதை நான் குறித்து வைக்கவில்லை. 21.09.2019-ம் தேதி இரவு பெற்றேன். சார் ஆட்சியரின் அறிக்கையை நான் எத்தனை மணிக்கு பெற்றேன் என்பதை அ.சா.ஆ.15 மற்றும் அ.சா.ஆ.17 சட்டப்பிரிவு மாற்று அறிக்கைகளில் நான் குறிப்பிடவில்லை. அ.சா.ஆ.15 மற்றும் அ.சா.ஆ.17 சட்டப்பிரிவு மாற்று அறிக்கைகள் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.15 மற்றும் அ.சா.ஆ.17 சட்டப்பிரிவு மாற்று அறிக்கைகள் உடனடியாக நீதித்துறை நடுவருக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்றால் அன்று இரவு நேரமாகிவிட்டதால் மறுநாள் அனுப்பிவைத்தேன். அந்த அ.சா.ஆ.15 சட்டப்பிரிவு மாற்று அறிக்கை நீதித்துறை நடுவரால் 22.09.2019-ம் தேதி நீதிமன்ற அலுவலல் நேரத்தில் கொடுக்கப்படாமல் அதன் பிறகு கொடுக்கப்பட்டதால் தான் அதில் 23.09.2019-ம் தேதியிட்ட நீதிமன்ற முத்திரையிடப்பட்டுள்ளது என்றால் நான் 22.09.2019-ம் தேதி நீதிமன்ற வேலை நேரத்திலேயே கொடுத்துவிட்டேன். 19.12.2019 தேதியிட்ட அ.சா.ஆ.17 சட்டப்பிரிவு மாற்று அறிக்கை நீதிமன்றத்தில் 07.01.2020-ம் தேதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சார் ஆட்சியர் விசாரணையின் போது நானும், துணை கண்காணிப்பாளரும் இருந்தோம் என்றால் சரியல்ல. நான் மட்டுமே இருந்தேன். அ.சா.4 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள படி சார் ஆட்சியர் அவரது அறிக்கையுடன் எதிரியை என்னிடம் ஒப்படைத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். எதிரியிடம் அன்று இரவே நான் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை. மறுநாள் காலை 6.30 மணிக்கு எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். எதிரியை முந்தைய நாள் இரவு காவல் நிலையத்தில் வைத்திருந்த போது அவரை வற்புறுத்தி மறுநாள் காலை ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளேன் என்றாலும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிய சட்டத்தின்படி ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடம் வற்புறுத்தி பெறப்பட்டது என்பதாலும், அவர் தானாக முன் வந்து கொடுக்கவில்லை என்பதாலும் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும்

அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசர் என்னால் எழுதப்பட்டது. அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகசர் என்னால் தயாரிக்கப்பட்டதல்ல. அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகசரும், அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசரும் ஒரே நபரால் எழுதப்பட்டது போல் உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசர் மூலம் நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருட்களில் ரத்தக்கறையோ, வேறு ஏதாவது அடையாளங்களோ இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட பொருட்களை கைப்பற்றப்படும் நேரத்தில் புகைப்படம் எடுக்கவில்லை. கைப்பற்றப்படுவதற்கு முன்பே புகைப்படம் எடுத்தேன். நான் தான் குற்ற இறுதியறிக்கை தயார் செய்தேன். அந்த பொருட்களை புகைப்படம் எடுத்த நபரிடம் வாக்குமூலம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. அந்தப் பொருட்களை புகைப்படம் எடுத்த நபரின் பெயரை குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. அந்தப் புகைப்படங்கள், அதற்கான நெகடிவ் அல்லது குறுந்தகடு நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. இராணிப்பேட்டை சார் ஆட்சியர் திரு.இளம் பகவத் என்பவரை நான் விசாரிக்கவில்லை. அவர் எனக்கு உயர் அதிகாரி என்பதால் வாக்குமூலம் தனியாக பதிவு செய்து குற்றப்பத்திரிக்கையுடன் இணைக்கவில்லை. துணை காவல் கண்காணிப்பாளர் திருமதி.கீதா என்பவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அவர் எனக்கு உயர் அதிகாரி என்பதால் வாக்குமூலம் தனியாக பதிவு செய்து குற்றப்பத்திரிக்கையுடன் இணைக்கவில்லை. என்னுடைய உயர் அதிகாரிகளான இராணிப்பேட்டை சார் ஆட்சியர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோரின் உந்துதலின் பேரில் நான் சரிவர விசாரிக்காமல் சட்டப்பிரிவை மாற்றம் செய்து எதிரி மீது பொய்யாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சட்டப்படி இராணிப்பேட்டை சார் ஆட்சியர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளரை விசாரித்து இறுதியறிக்கை தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றாலும், நான் தாக்கல் செய்த இறுதியறிக்கை முறையாக விசாரிக்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் கைப்பற்றிய பொருட்கள் எங்கும் கிடைக்கும் கூடிய பொருட்கள் என்றால் சரியல்ல. நான் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாக சொல்லும் பொருட்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இறந்த தனலட்சுமியின் சடல கூராய்வு அறிக்கையில் அவருக்கு தலையிலோ அல்லது உடலில் வேறு எங்கும் வெளிக்காயம் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர்களை அவர்கள் பணிபுரிந்த மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன். அவர்களது வாக்குமூலங்களை மடி கணினி மூலம் தயார் செய்து நகல் எடுத்து இறுதியறிக்கையுடன் தாக்கல் செய்தேன். சம்பவ இடத்தில் வைத்து மற்ற சாட்சிகளை விசாரித்தேன். எதிரி பழங்குடியின இனத்தை சேர்ந்தவர் என்றால் அவர் பைரவா இனத்தை சேர்ந்தவர் என்பது மட்டுமே தெரியும். இறந்த தனலட்சுமி இரண்டு மாத கர்பமாக இருந்த போது ஏற்கனவே

அவருக்கு சிறு பெண் குழந்தை இருந்ததால் கருக்கலைப்பு செய்ய விரும்பிய போது எதிரி அதற்கு மறுப்பு தெரிவித்து கருக்கலைப்பு செய்ய வேண்டாம் என்று சொன்னதால் தனலட்சுமி அவராகவே தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றாலும், அவர் பழங்குடி இனத்தை சேர்ந்தவர் என்பதால் அவரது இறப்பு அரசியல் ரீதியான பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும் என்பதால் இராணிப்பேட்டை சார் ஆட்சியர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆலோசனையின் படி எதிரி மீது பொய்யான வழக்கு புனையப்பட்டுள்ளது என்றாலும், எதிரி எந்த தவறும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:—</u>** இல்லை

BALAKRISHNAN
Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.